## திராவிடத்தால் தலைநிமிரும் தலைநகர்!

தொழில் வளர்ச்சிக்கு உகந்த கட்டமைப்புகளைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளதாக, அமெரிக்க முதலீட்டு நிறுவனத்தின் ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. குறிப்பாக, உள்கட்டமைப்பு வசதிகள், திறமையான ஆட்கள் நிறைந்த நகரமாக சென்னை விளங்குவதால், பன்னாட்டு நிறுவனங்கள் சென்னையை நோக்கி படையெடுக்கின்றன. தற்போது, சென்னையில் 250 க்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலையில், 2030-ஆம் ஆண்டுக்குள் இந்த எண்ணிக்கை 450 ஆக உயரும் எனவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

தகவல் தொழில்நுட்பம், நிதி, ஆய்வு என பல்வேறு துறைகளுக்கான சேவைகளை வழங்கும் பல பன்னாட்டு நிறுவனங்கள், கடந்த ஓராண்டு காலத்தில் சென்னையில் கால் பதித்துள்ளன. குறிப்பாக, இந்திய அளவில் அதிக வெளிநாட்டு நிறுவனங்களை, சென்னை ஈர்த்து வருவதாகவும் கூறுகின்றனர்.

அதற்காக அந்நிறுவனம் பட்டியலிட்டிருக்கும் காரணங்கள் அனைத்தும் 'திராவிட மாடல்'ஆட்சியில் தொழில் வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டு வரும் ஊக்கமாக உள்ளன. 'சர்வதேச நிறுவனங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கான மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள், திறமை வாய்ந்த பணியாளர்கள், புத்தாக்கத் தொழில் சூழல் மற்றும் செயலூக்கம் நிறைந்த அரசின் கொள்கை முடிவுகளால், சென்னை நகரம் உலகளாவிய நிறுவனங்களை ஈர்க்கிறது' என்றும் அந்த ஆய்வறிக்கை பாராட்டியுள்ளது.

'தமிழ்நாடு ஸ்டார்ட் அப் அண்ட் இன்னோவேசன் பாலிசி - 2023', 'ரிசர்ச் அண்ட் டெவலப்மென்ட் பாலிசி - 2022' ஆகிய திட்டங்கள் தொழில்முதலீடுகளை ஈர்ப்பதற்குப் பெருந்துணையாக நிற்கின்றன என்பதும், அந்த ஆய்வறிக்கை சொல்லும் செய்தி. திட்டங்களால் திக்கெட்டும் பரவுகிறது 'திராவிட மாடல்!

## :ப்ளாஷ்பேக்





எம்.பி.உதயசூரியன்

### பக்தர்கள் அல்ல; மாணவர்கள்!

முத்தமிழறிஞர் கலைஞர், 'யோகா' கற்றுக் கொண்ட காலகட்டம். இதுகுறித்து, 'குங்குமம்' இதழில் கட்டுரை எழுதினேன். அந்தக் கட்டுரையை வாசிக்க விரும்பினார் கலைஞர். கொண்டு சென்றேன். அவரைக் கண்டு நின்றேன். அமரச்சொன்னார். வாசித்தவர், இரண்டாவது பாராவிலேயே ஒரு திருத்தம் செய்தார். ஏறிட்டுப் பார்த்து என்னிடம் சொன்னார், "யோகக்கலை நிபுணர் டி.கே.வி.தேசிகாச் சாருக்கு உலகெங்கிலும் பக்தர்கள் உள்ளனர்னு எழுதியிருக்கீங்க. அவர்கள் பக்தர்கள் அல்ல... மாணவர்கள், என்னைப்போல," என்றார். ஒரே ஒரு வார்த்தைதான். ஆனால், அர்த்தமே வேறு. கலைஞரின் பார்வைக்கூர்மை திகைக்க வைத்தது.

**– எம்.பி.உதயசூரியன்,**
**பத்திரிகையாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கருஞ்சட்டைப் படையின் முதல் தொண்டர்!

1945-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் தேதி 'குடி அரசு' இதழில் 'கருஞ்சட்டைப் படை' அமைப்பதாக அறிவிப்பு வெளியிட்டார் பெரியார். அதன் தற்காலிக அமைப்பாளர்களாக ஈ.வி.கே.சம்பத், எஸ்.கருணானந்தம் ஆகிய இருவரையும் நியமித்தார். அந்த அறிவிப்பை, டிசம்பர் 22 வரை 'குடி அரசு' இதழில் வெளியிடச் செய்தார். ஈரோட்டில் 'குடி அரசு' அலுவலகத்தில் அவர்கள் இருவரது முன்னிலையிலும் கருஞ்சட்டைப் படையின் முதல் தொண்டராகப் பதிவு செய்து கொண்டவர் கலைஞர்.

## சீரணி ⟹ இளைஞர் அணி 38

**ந.வினோத்குமார்**

ஓவியம் : ரவி பேலட்




# இங்கிலாந்தும் இளைஞர் அணியும்!

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கென தனித்துறை அமைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர். அவர் வழியில், இளைஞர்களின் முன்னேற்றத்துக்கு என **'திராவிட மாடல்'** அரசு பல முயற்சிகளைச் செய்து வருவதை அறிவோம்.

அவையெல்லாம், அன்று அண்ணா உருவாக்கிய 'சீரணிப் படை'யின் தொடர்ச்சியாகவும், அதன் இலக்குகள்தான் என்றும் சொல்லலாம். சீரணி அணியினர் இளைஞர் அணிப் படையாக எழுச்சி காண்பதற்காக, வெளிநாடுகளில் இளைஞர்களின் செயல்பாடுகளைப் பார்த்து, அவற்றை தமிழ்நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவரத் திட்டமிடுகிறார் கலைஞர்.

தமிழ்நாட்டில் இளைஞர் அணி எப்படி அமைய வேண்டும் என, 'தமிழரசு' கட்டுரையில் அன்று, தமிழ்நாடு ஆவணக் காப்பக இயக்குநராக இருந்த எஸ்.சிங்கராசன், தான் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருப்பார். குறிப்பாக, இங்கிலாந்தில் இயங்கி வந்த இளைஞர் அமைப்புகள் பற்றி எழுதி, அவைபோல தமிழ்நாட்டிலும் இருக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தார்.

**இங்கிலாந்திலிருந்து எடுத்துக்கொண்ட பாடமே இன்றைக்கு தமிழ்நாடு இளைஞர்களின் முன்னேற்றம் என்றால், மிகையில்லை. அதன் ஆணிவேராக நின்றது, சீரணி.**

"இங்கிலாந்தில் இளைஞர் பணி மூன்று முக்கிய பங்காளிகளால் நடத்தப்படுகின்றது. அவை முறையே அந்நாட்டின் அரசு, மாவட்டக் கல்வி அதிகாரிகள், தன்னார்வலர் நோக்கத்தில் முன்வரும் சங்கங்கள். இந்நிறுவனங்கள் 14 முதல் 20 வயதிற்கு உட்பட்ட ஓய்விலுள்ள இளைஞர்களுடன் இணைந்து செயல்படுகின்றன.

இளைஞர் முன்னேற்றம் தேசியக் கல்வியின் முக்கிய பொறுப்பாக 1839-ஆம் ஆண்டு **'இளைஞர் பணி'** என்ற தலைப்பில் ஆரம்பிக்கப்பட்டது. 1944-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கல்விச் சட்டத்தின் அடிப்படையில், உள்ளாட்சி மன்றங்கள் கட்டாயமாக அவ்வட்டாரங்களின் தேவைக்கேற்ப இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு ஏற்ப வசதிகளைச் செய்து கொடுப்பதோடு, பணியாற்ற முன்வந்துள்ள இளைஞர் சங்கங்களுடன் இணைந்து, நல்ல முறையில் பணியாற்ற வேண்டும்.

இங்கிலாந்தில் 1948-ஆம் ஆண்டு அமலுக்கு வந்த வேலை வாய்ப்புச் சேவை சட்டத்தின் கீழ், தொழில் அமைச்சர் இளைஞர்களின் வேலைக்கும் சேவைக்கும் பொறுப்பு வகித்தார். அவருக்கு ஆலோசனை கூற, **'தேசிய இளைஞர் வேலை மன்றம்'** ஒன்று அமைக்கப்பட்டது. அம்மன்றம், நாட்டிலுள்ள பலதரப்பட்ட கல்வி நிறுவனங்களையும், தனியார் நிறுவனங்களையும் ஒன்று சேர்த்துப் புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வந்தது. ஆகவே, கல்வி கற்று முடிந்ததுமே இளைஞர்கள் கல்வி நிலையங்களோடு தொடர்புள்ள இளைஞர் சேவை செய்யும் மன்றங்களுக்குக் கொண்டு வரப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவியும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன" எனக் குறிப்பிட்டிருப்பார்.

உலகளாவிய பரந்துபட்ட பார்வையைக் கொண்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இதுபோன்ற சிந்தனைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு அன்றும் இளைஞர்களுக்கு சீரணியில் முன்னுரிமை அளித்தார்.

பின்னாளில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கு என தனித் துறை ஒன்றை உருவாக்கினார்.

இன்று இளைஞர் முன்னேற்றத்துக்கான 'திராவிட மாடல்' முயற்சிகள் எல்லாம், **'நான் முதல்வன்', 'ஸ்டார்ட் அப்'** போன்ற திட்டங்களின் வடிவில் செயல்படுத்தப் படுகின்றன. ஆக... இங்கிலாந்திலிருந்து எடுத்துக்கொண்ட பாடமே இன்றைக்கு தமிழ்நாடு இளைஞர்களின் முன்னேற்றம் என்றால், மிகையில்லை. அதன் ஆணிவேராக நின்றது, சீரணி.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி 38

**கோவி.லெனின்**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# அரசியல் முதிர்ச்சியற்றவரின் ஞாபக மறதி!

***பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் பற்றி முதலமைச்சர் பேசியதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று அன்புமணி எம்.பி. கோருகிறாரே?***

பா.ம.க. நிறுவனரின் அறிக்கை குறித்து, செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த முதலமைச்சர், "அந்தப் பிரச்சினை குறித்து துறையின் அமைச்சர் விளக்கம் அளித்துவிட்டார். டாக்டர் ராமதாஸ் அறிக்கை கொடுத்துக் கொண்டேயிருப்பார். அவருக்கு வேறு வேலையில்லை" என்று சொன்னார். இதற்குத்தான் அன்புமணி எம்.பி. ஆத்திரப்படுகிறார்.

**தி.மு.க. எம்.எல்.ஏக்களின் வாக்குகள் மூலம் ராஜ்ய சபா எம்.பி.யாக்கிய கலைஞர் என்ற அரசியல் பண்பாளர் இல்லையென்றால், அன்புமணிக்கு அரசியலில் அட்ரஸ் இருந்திருக்காது.**



அவர் ஆத்திரப்பட வேண்டியது, அவர் தலைவராக இருக்கும் கட்சியின் நிறுவனர் வெளியிட்ட அறிக்கையில் பிரச்சினைக்குக் காரணமான, அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்றிய அரசை நோக்கியோ, பிரதமரை நோக்கியோ எந்தக் கேள்வியும் இல்லை என்பதற்காகத்தானே தவிர, முதலமைச்சர் சொன்ன பதிலுக்கு அவர் கோபப்பட்டிருப்பது, அரசியல் உள்நோக்கமின்றி வேறில்லை.

முதலமைச்சர் அவர்கள் தன்னிடம் கேட்கப்பட்ட கேள்வியின் தன்மையை உணர்ந்து புறக்கணிக்கும் வகையில் பதிலளித்துள்ளார். மற்றபடி, இதில் அவமதிப்பு எதுவும் இல்லை. மாறாக, டாக்டர் ராமதாஸ் அவர்கள்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதவிக்குரிய மரியாதையைக்கூடத் தராமல், சில வாரங்களுக்கு முன் ஒருமையில் பேசி அவமதிப்பு செய்தார்.

அரசியல் சந்தர்ப்பங்களுக்கேற்ப அவருடைய வார்த்தைகள் வெளிப்படும். முத்தமிழறிஞர் கலைஞரைப் பற்றியும்கூட அரசியல் ரீதியான விமர்சனங்களில் கடுமையான-கொச்சையான சொற்களை டாக்டர் பயன்படுத்தியது உண்டு. அதுபோல, அ.தி.மு.க.வின் தலைமைப் பொறுப்பில் இருந்த ஜெயலலிதா பற்றியும் கூட்டணி வைத்த நேரத்தில் ஒன்றும், கூட்டணி வைக்காத நேரத்தில் மற்றொன்றும் பேசியிருக்கிறார், டாக்டர் ராமதாஸ்.

மக்களவைத் தேர்தல் களத்தில் தோற்று, மாநிலங்களவை உறுப்பினராகச் செயல்படும் அன்புமணி அவர்கள் தன் கட்சி நிறுவனரின் அறிக்கையில் கேட்க மறந்தவற்றை, நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசை நோக்கிக் கேட்கட்டும். அதைவிடுத்து, தங்களால்தான் 2006-இல் தி.மு.க. ஆட்சி அமைந்தது என்பதும், மெரினாவில் கலைஞர் நினைவிடம் அமைந்ததும் தங்களால்தான் என்பதும் அறிவின் முதிர்ச்சியின்மையைத்தான் காட்டுகிறது.

அரசியல் களத்தில் அவருக்கு எந்த அனுபவமும் இல்லாத நிலையிலும், நாடாளுமன்றத்தின் மக்களவையிலோ மாநிலங்களவையிலோ எம்.பி.யாகவும் இல்லாதபோதும், பிரதமர் மன்மோகன்சிங் அமைச்சரவையில் கேபினட் அந்தஸ்து கிடைக்கச் செய்து, தி.மு.க. எம்.எல்.ஏக்களின் வாக்குகள் மூலம் ராஜ்ய சபா எம்.பி.யாக்கிய கலைஞர் என்ற அரசியல் பண்பாளர் இல்லையென்றால், அன்புமணிக்கு அரசியலில் அட்ரஸ் இருந்திருக்காது.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

674

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.